புதுக்கோட்டை மாவட்டம்.

முதல் இடைப்பருவத் தேர்வு - 2022	தேர்வு எண்						
காலம் : 1-30 மணி	X – சமூக அறிவியல்	மதிப்பெண் : 50					

பகுதி - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (10x1=10)
2. ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் எனக் கூறியவர் யார்?
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மாசேதுங்

2. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

3. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் _____
அ) ஊட்டி ஆ) ஆணைமுடி இ) கொடைக்கானல் ஈ) ஜின்டாகடா

4. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும்கோடு _____ ஆகும்
அ) சம வெப்பக் கோடுகள் ஆ) சம மழைக்கோடுகள்
இ) சம அழுத்தக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்

5. நமது அடிப்படைக் கடமைகளை _____ இடமிருந்து பெற்றோம்
அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
இ) ரஷ்யா அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

6. GDPயில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?
அ) வேளாண்மை துறை ஆ) தொழில் துறை
இ) பணிகள் துறை ஈ) மேற்கண்டவதுவுமில்லை

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

7. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை _____ என அழைக்கப்பட்டது.
8. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு _____
9. _____ பேராணைகள் சட்டப்பிரிவு 32ல் குறிப்பிடப்படுகின்றன.
10. இரண்டாம் துறையை வேறுவிதமான _____ துறை என அழைக்கலாம்.

பகுதி - II

குறிப்பு: எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (5x2=10)

11. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
12. டாலர் ஏகாதிபத்தியம் - தெளிவுபட விளக்குக.
13. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?
14. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
15. அதிக மழைபெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.
16. இந்தியாவின் செம்மொழிகள் எவை?
17. நீதிப்பேராணை என்றால் என்ன?
18. தனி நபர் வருமானம் என்றால் என்ன?

பகுதி - III

குறிப்பு: எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (4x5=20)

19. வேறுபடுத்துக.
அ) இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்.
ஆ) வானிலை மற்றும் காலநிலை.
இ) காரணம் கூறுக. இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன

20. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.
21. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
22. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
23. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
24. கீழ்கண்டவற்றிற்கு காலக்கோடு வரைக.
1900 முதல் 1920 வரையிலான உலக வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள்
ஏதேனும் ஐந்தினை எழுதுக.

பகுதி - IV

25. அ) உலக வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறி. (5x1=5)
1) கிரேட்பிரிட்டன் 2) மொராக்கோ 3) துருக்கி 4) பிரான்ஸ் 5) ரஷ்யா

ஆ) இந்தியாவின் வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களில் ஏதேனும் 5 மட்டும் குறி. (5x1=5)
1) ஆரவல்லிமலைத் தொடர் 2) கங்கை நதி 3) தக்காண பீடபூமி
4) மன்னார் வளைகுடா 5) மலைக்காடுகள்
6) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை 7) பன்னா உயிர்க் கோளப்பெட்டகம்
8) K_2 சிகரம்

Padasalai.Net